விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | வைகாசி 04 வியாழக்கிழமை (18.05.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 150

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# வவுனியாவில் அதிரடித் தாக்குதல்

# 4 படையினர் பலி; ஆயுதம் மீட்பு

## நாகர்கோவிலிலும் துப்பாக்கித் தாக்குதல்

(வவுனியா)

**வவுனியா மாமடுப்பகுதியில் அமைந்திருந்த இராணுவத்தின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகளால் அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

**நேற்று மாலை 5.45 மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் நான்கு படை யினர் கொல்லப்பட்டுள்ளனர்.**

**நேற்று முன்தினம் பாலமோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்தனர்.** (08 ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோவிலில் கிளைமோர்

கல்முனை திருக்கோவில் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

திருக்கோவில் பிரதான வீதியில் சிறப்பு அதிரடிப்படையினர் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த போது காலை 8.30 மணியளவில் கிளைமோர்த்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த தர்மரட்ண என்பவர் படுகாயமடைந்த நிலையில் அம்பாறை (08 ஆம் பக்கம் பார்க்க)

## இயல்புநிலை திரும்பும்வரை பணிப்புறக்கணிப்பு தொடரும்

### பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை பணிப் புறக்கணிப்புத் தொடருமென யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. யாழ்.குடாநாட்டில் பணிப்புறக்கணிப்பானது இராணுவமும் அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களும் குடாநாட்டு மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் படுகொலைகளில் இருந்து பாதுகாப்பு பெறும் நோக்குடனேயே நடைபெற்று வருகின்றது.

இப் புறக்கணிப்பை வழமை நிலைக்கு கொண்டுவருமாறு இராணுவம் கோரியிருப்பது (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழினப் படுகொலையைக் கண்டித்து மட்டு.அம்பாறையில் பூரண ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.தீவகத்தில் இடம் பெற்ற படுகொலைகளைக் கண்டித்தும் தமிழர்தாயகப் பிரதேசத்தில் படையினர் ஆக்கிரமிப்புப் பகுதியில் இடம் பெறும் தமிழினப்படுகொலைகளைக் கண்டித்தும் மட்டு. அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

ஹர்த்தால் காரணமாக மட்டக்களப்பு நகரம், வாழைச்சேனை ,செங்கலடி,களுவாஞ்சிக்குடி பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை.

பாடசாலைகள்,அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள் என்பனவும் இயங்க வில்லை. மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக்கிடந்தது. அதேவேளை வாழைச்சேனை கறுவாக்கேணியில் நேற்று முன் தினம் காலை இனந்தெரியாத சில இளைஞர்களால் லொறி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

ஏறாவூரைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான லொறி ஹர்த்தாலை மீறி போக்குவரத்துச் செய்ய முயன்ற போது லொறிக் குத் தீவைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் லொறியை மீட்டு வாழைச்சேனைப் பொலிஸ் (08 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் கிளைமோர் ஐந்து இராணுவத்தினர் பலி

மணலாற்றில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வழமைபோன்று காலை 7.20 மணியளவில் வீதி ரோந்து பணியில் ஈடுபட்ட இராணுவத்தினரை இலக்குவைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீதி யோரம் வைக்கப்பட்டிருந்த கிளைமோரே வெடித்ததாக இராணுவத் தரப்பு செய்திகள் தெரிவித்தன. இத்தாக்குதலினையடுத்து அப் பகுதி எங்கும் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ச-05)

## யாழ்.நகர மத்தியில் வைத்து இளைஞன் சுட்டுக்கொலை

யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்து நேற்றுக் காலை 8.45 மணியளவில் இளைஞன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

காங்கேசன் துறையை சொந்த இடமாகவும் கணேசபுரம் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வசிறி சிறீதாஸ் (வயது 35) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியராக பணியாற்றி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறைச்சாலையில் கைதிகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 30 பேர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறு குற்றங்களுடன்தொடர்புடைய தம்மை நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து நேற்று காலை 8.30 மணியளவில் சிறைச்சாலையினுள் போராட்டத்தினுள் ஈடுபட்டனர்.

கைதிகளில் பெருமளவானோர் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படாது நீண்ட நாட்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதென கைதிகள் தெரிவித்தனர். அத்துடன் தமக்கு வழங்கப்படும் உணவு சுகாதார முறைப்படி வழங்கவேண்டும் என தெரிவித்துள்ள அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கும் போது அரச உத்தியோகத்தர்களே பிணை நிற்கவேண்டுமென்ற நீதிமன்றின் நிபந்தனையை பரிசீலனை செய்யவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை சிறைசாலைக்குச் சென்ற யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, மேலதிக நீதிவான் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மதத்தலைவர்கள் இணைந்து நேற்று மௌனப்போராட்டம்

(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலையைக் கண்டித்து வன்னி மதத்தலைவர்கள் கிளிநொச்சியில் உள்ள ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி பணிமனை முன்பாக நேற்று மௌனப்போராட்டம் நடத்தினர்.

நேற்றுக் காலை 9மணிக்கு ஆரம்பித்த இப் போராட்டம் நண்பகல் 12.45 மணிக்கு ஐ.நா.பிரதிநிதியிடம் மனுக்கையளிப்புடன் நிறைவு பெற்றது.

போராட்ட முடிவில் ஐ.நா.செயலர் நாயகம் கொபிஅனானுக்கு வன்னி மதத்தலைவர்கள் கடிதமொன்றினை அனுப்பிவைத்தனர்.அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்து, கத்தோலிக்க, அங்கிலிக்கன், மெதடிஷ், தென்னிந்திய திருச்சபை, இஸ்லாம் முதலிய வெவ்வேறான மதத்தலைவர்கள் இம் மனுவினை தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

இலங்கையில் இடம்பெற்று வரும் சட்ட திட்டங்களை மீறும் நிகழ்வுகளில் அண்மைக் காலப்போக்கால் அதிர்ச்சியும் சஞ்சலமும் அடைந்து எமது கண்டனத்தை ஓர் அமைதி இருப்பு வெளிக்காட்டலால் பதிவு செய்து அதுவும் சிறப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் பச்சிளம் பாலகர், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர் உட்பட அப்பாவிப் பொதுமக்களை திடீரென (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்கு-கிழக்கில் இருந்து உடனடியாக அரச படைகள் வெளியேற வேண்டும்

## அவுஸ்திரேலிய ஈழத்தமிழர் சங்கம் வலியுறுத்து

இலங்கையின் வடக்கு-கிழக்கிலிருந்து அரச படைகள் வெளியேற வேண்டும் என்று அவுஸ்திரேலியாவின் விக்ரோறியா ஈழத் தமிழ்ச்சங்கம் வலியுறுத்தியுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவுக்கு அந்த அமைப்பின் தலைவர் எம்.சிவகுமார் மற்றும் செயலாளர் எஸ்.மகேந்திரராஜா ஆகியோர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தமிழர் தாயக பிரதேசத்தில் இராணுவம் மற்றும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரால் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் மற்றும் வன்முறைகளால் வெளி நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் பாரிய அதிருப்தியில் உள்ளனர்.

தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ் மாணவர்கள் மற்றும் அப்பாவித் தமிழ் மக்கள் தொடர்ந்து சமாதான காலத்திலும் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். இத்தகைய நிலைமையானது கௌரவமான தீர்வு என்ற உங்களது கோட்பாடு குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இராணுவ சோதனைச் சாவடிகளில் காணாமல் போகும் மக்கள் கடைசியில் சடலங்களாக மீட்கப்படுகின்றனர். சம்பவ இடங்களுக்கு பொலிஸார் செல்ல மறுக்கின்றனர். தமிழ் மக்களினது படுகொலையில் இராணுவத்தினருக்குத் தொடர்பிருப்பதாக கண்காணிப்புக்குழுவினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இத்தகைய படுகொலைகள் பாரிய யுத்தநிறுத்த மீறல்களாகும். பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொதுமக்களின் கட்டடங்களிலிருந்தும் அரச படைகள் வெளியேற மறுத்து வருகின்றன. மேலும் தொடர்ச்சியான மீன்பிடித் தடையும் விதிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்துமே அப்பட்டமான யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும்.

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினால் வெளியேற்றப்பட்ட 7 ஆயிரத்து 465குடும்பத்தினரை மீளக் குடியமர்த்த கடந்த வாரம் இலங்கையின் தலைமை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஜெனீவா ஒப்பந்தத்தில் துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களைக் களைவதாக அரசாங்கம் ஒப்புக்கொண்டது. ஆனால் அதை அரசாங்கம் செய்யவில்லை. மீண்டும் ஜெனீவாப் பேச்சுக்கள் என்று கூறி உங்கள் அரசாங்கமும் வெளிவிவகார அமைச்சரும் சர்வதேச சமூகத்தை முட்டாளாக்கும் அவதூறு பரப்புரைகளை மேற்கொள்கின்றனர்.

ஆனால் ஆசிய மனித உரிமைகள் அமைப்பு மற்றும் ஐ.நா.அகதிகளுக்கான அமைப்பு ஆகியவை இலங்கையின் கள நிலைமைகள் குறித்து தெளிவாகச் சொல்லி இருக்கின்றன. இலங்கை அரசாங்கம், இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுக்களினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரசபயங்கர வாதத்தை அவுஸ்திரேலிய வாழ் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய நாம் வன்மையாகக் கண்டனம் செய்கிறோம்.

தமிழர்தாயகப்பகுதியில் இயல்பு நிலைமை உருவாக வேண்டுமெனில் உடனடியாக முழுமையாக அரச படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் நாம் வலியுறுத்துகிறோம். எமது இந்த நியாயமான கோரிக்கைக்கு அவுஸ்திரேலியா மற்றும் மேற்குலக நாடுகள் ஆதரவளிக்கும் என்று நம்புகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மருத்துவ மாது மாணவர்களின் கவனத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

மருத்துவ மாது மாணவர் 2004 ஆ பிரிவிற்கான பொதுச் சுகாதார மருத்துவமாது பகுதி 11 வெளிக்களப்பயிற்சிசெய்யும்மாணவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை அன்று பயிற்சிக்கான ஆயத்தத்துடன் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணத்திற்கு வருமாறு யாழ்ப்பாணம்த தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (க)




நேற்றுக்காலை யாழ்.மத்திய போக்குவரத்து நிலைய வாயில் அருகே சுட்டுக்கொல்லப்பட்ட செல்வசிறி சிறிதாஸ் என்பவரது சடலத்தையும், சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் மரண விசாரணைகளை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- திலீவின்பன், சதீஸ்)

# இராசி பலன்

**18.05.2006**
**(வைகாசி 4, வியாழக்கிழமை)**
**பஞ்சமி காலை 11.08 மணிவரை**
**உத்தராடம் முன்னிரவு 7.43 மணிவரை**
**இராகுகாலம் 1.23-2.53மணிவரை**
**சுபநேரம் 7.23-8.53 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தொழில் மேன்மை, காரிய அனுகூலம், பிறர் உதவி, ஆரோக்கியம். |
| இடபம் | பிதாசிந்தை, கட்டுப்பாடு, பிரயாணம், காரிய தாமதம். |
| மிதுனம் | எதிரிகள் தொல்லை, எடுத்த காரியம் தாமதமாகும், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம். |
| கடகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, செய்தொழில விருத்தி, குடும்பசுகம், முயற்சி கைகூடும். |
| சிங்கம் | சுபநிகழ்வு, காரியசித்தி, விருந்துபசாரம், புதிய திருப்பம். |
| கன்னி | வியாபார நன்மை, குடும்பக்கவலை, முயற்சி தாமதம், அதிகசெலவு. |
| துலாம் | சுபசெலவு, பெரியோர் வெறுப்பு, காரிய தாமதம், கல்வியில் ஆர்வம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், வாகன சுகம், தொழில் விருத்தி. |
| தனுசு | விவாதம், தொழில்நன்மை, அதிக பிரயாசை, பொருள்விரயம். |
| மகரம் | நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, போசனசுகம், தெய்வசிந்தை. |
| கும்பம் | சயனசுகக்குறைவு, பிரயாணம், திடீர் நன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | பெரியோர் உதவி, செய்தொழில் விருத்தி, நன்மதிப்பு, காரிய அனுகூலம். |

- வளவன்

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு கட்டம் கட்டமாக தடுப்பு மருந்தேற்றப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

இதன்படி கடந்த 4ஆம் திகதி போடப்படவிருந்த வளர்ப்பு நாய் களுக்கான தடுப்பு மருந்து ஹர்த்தால் காரணமாக போடப்படவில்லை.

அன்றைய தினம் தடுப்பு மருந்து ஏற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த இடங்களில் எதிர்வரும் 31 ஆம் திகதி தடுப்பு மருந்தேற்றப்படும். தடுப்பு மருந்தேற்றப்படும் இடங்களினதும் நேர விபரங்களும் வருமாறு,

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள சந்தன மாதா கோவில் வளாகத்தில் காலை 8 மணி முதல் 10 மணிவரைக்கும். பாசையூர் சிறுவர் பூங்காவில் மு.ப.11 மணி முதல் 12.30 மணிவரையும் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் பி.ப.2மணி முதல் 3மணி வரையும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படும். (க)

# சிறுநீரக சிகிச்சை நிலையங்களை நவீன மயப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

சிறுநீரக நோயாளர்களுக் குச் சிகிச்சை அளிக்கும் நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்குச் சுகாதாரப் பராமரிப்பு போஷாக்குத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடமத்திய மாகாணத்திலும், ஏனைய மாகாணங்களின் சில பிரதேசங்களிலும் சிறுநீரக நோயாளர்களாக பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலம் முதல் அதிகரித்துள்ளது. இதனையடுத்தே சிறுநீரக நோயாளர் களுக்குச் சிகிச்சை அளிக்கும் நிலையங்களின் வசதிகளைமேம்படுத்த முடிவு செய்ததாக அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் 28மில்லியன் ரூபாசெலவில் கண்டிபோதனா வைத்தியசாலையில் விசேட பிரிவொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சிறுநீரகம் பொருத்துவதிலும், சிறுநீரக நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதிலும் கண்டி போதனா வைத்தியசாலை பிரதான நிலையமாக மாறியுள்ளது. இவ் வைத்தியசாலையில் இந்த விசேட பிரிவு, ஜனாதிபதி நிதியம் ஒதுக்கிய நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

சிறுநீரக நோயாளர்களுக்கும் சிகிச்சை அளிக்கும் பிரிவு 2001ஆம் ஆண்டிலேயே கண்டி போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் சிறுநீரகம் பொருத்தும் சத்திர சிகிச்சைகள் சுமார் 300 மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-9)

# படுகொலைகளை முஸ்லிம் தலைவர்கள் கண்டனம் செய்யவில்லை - எழிலன் வருத்தம்

(கிளிநொச்சி)

திருகோணமலை மூதூரில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை படையினர் படுகொலை செய்கின்ற போதும் முஸ்லிம் தலைவர்கள் கண்டனம் தெரிவிக்காமல் இருப்பது கவலைக்குரியது என்று திருமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.எழிலன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எழிலன் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்க ளிடையே பிரச்சினைகள் உரு வாகின்றபோது அதைத் தடுப்பதற்கான இருதரப்பு உடனடிச் சந்திப்புகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று முன்னரே போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். முஸ்லிம் தலைவர்கள் தங்களது தனிப்பட்ட நலனில்தான் அக்கறை கொள்கின்றனர். மூதூர் கிழக்கில் விமானக் குண்டுவீச்சில் 15அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது முஸ்லிம்தலைவர்கள் கண்டனம் தெரிவிக்கவில்லை. அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிராமம் ஒன்றில் மூன்று அப்பாவி முஸ்லிம்கள் கொல்லப்பட்ட போதும் அவர்கள் கண்டனம் தெரிவிக்கவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலில்தான் அந்த முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாக அரசாங்கம் கூறியதைக் கூட முஸ்லிம் சமூகத்தினர் மறுக்கவில்லை. படுகொலைகளை தடுத்து நிறுத்துவது குறித்து உள்ளூர் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் நான் பேச்சுக்களை நடத்திய பின்னரும் கூட மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரகாலமாக தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு வரும் நிலையிலும் கூட முஸ்லிம் சமூகத்தினர் எதுவித கண்டனத்தையும் ஆறுதலையும் தெரிவிக்கவில்லை என்றார்.

இதனிடையே மூதூர் கிழக்கில் சி.எழிலனை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் கடந்த திங்கட்கிழமை மாலை சந்தித்துப் பேசினார். மூதூரில் இராணுவத்தினரால் 4 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இது குறித்து அச்சந்திப்பில் ஆராயப்பட்டது. அடையாளம் தெரியாத நபர்களால் 58ஆம் மைல் கட்டையில் எம்.எஸ்.எம். நூர் (வயது 45) என்ற வர்த்தகர் அடையாளம் தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டார். அதேபோல கடந்த வாரம் 4 தமிழ் இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

ஆயுதம் தாங்கிய முஸ்லிம் குழுவினருடன் இணைந்து இராணுவத்தினர் இப்படுகொலை நடத்தியதாக எழிலன் குற்றம் சாட்டியிருந்தார். (க)

# உரிய விசாரணையின்றி முடிவுகளை வெளியிட முடியாது - க.கா.குழு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நடைபெறும் படு கொலைச் சம்பவங்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளாமல் அறிக்கை எதனையும் வெளியிட முடியாது என போர் நிறுத்த கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

இது குறித்து கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓல்ப்ஸ்டொடிட்டர் கூறுகையில்,

எந்த ஒரு சம்பவம் தொடர்பாக தெளிவான விவரங்களும் முறையான விசாரணைகளும் இல்லாமல் நாம் எவரையும் குற்றம்சொல்லி முடிவுக்கு வரமுடியாது.

வன்முறைகள் அதிகரிக்க கண்காணிப்புக் குழுவினர் காரணம் என்று யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி குற்றம் சாட்டியுள்ளார். இதை ஏற்க முடியாது.

மந்துவில் பகுதியில் 8 இளைஞர்கள் காணாமல் போனமை தொடர்பாக எதுவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை. அங்கே சடலங்கள் இல்லாத நிலையில் நாம் என்ன செய்ய முடியும்?

இது தொடர்பில் இளம்பரிதியை யாழ். கண்காணிப்புக் குழுவினர் நேரடியாக சந்தித்துப் பேசவுள்ளனர் என்றார். (க)

## அவுஸ்திரேலியாவில் யசூசி அகாசி

இலங்கைக்கான ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி, அவுஸ்திரேலியா சென்றுள்ளார்.

இலங்கை பிரச்சினைக்குத் தீர்வு காண அவுஸ்திரேலியாவும் இணைந்து செயற்பட வேண்டும் என்று இச்சந்திப்பின் போது அவுஸ்திரேலிய அரசாங்கத்தை அகாசி வலியுறுத்தியுள்ளார்.

இத் தகவலை ஜப்பான் ரைம்ஸ் என்ற இணைய இதழ் வெளியிட்டுள்ளது. (க)

சுன்னாகம்

கதிரமலைச் சிவன் மஹோற்சவம்




5ஆம் நாள்

இன்று புஸ்பக விமானக் காட்சி

இன்னலது நீக்கி

மண்ணுமெழு விண்ணுமிரு கண்ணுமென வாகி
மாலயனுந் தோற்றபெரு வாச்சரிய மாகி
பொன்னுமணி பூணுமலர் மாலையது சூடி
போதமென வேதமொழி யாதிவழி பாடி
நண்ணுதவ ஞானமுனி நால்வரையு மேகி
நானிலமுஞ் ஞானமெழ ஆலமரு மீசன்
எண்ணுநிறை யன்பர்தம தின்னலது போக்கி
ஏற்றருளும் அம்பிகை இலணைந்த பெருமானே!

-இயல்வாணன்

# யாழ்.பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு கல்வி ஆண்டு 2005/2006 க்கான புதிய அனுமதிபெற்ற மாணவர்களின் பெயர் பட்டியலை பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக் குழு வெளியிட்டுள்ளது.

இப்பட்டியலில் கலை, பௌதிக விஞ்ஞானம், சங்கீதம், நடனம் ஆகிய கற்கை நெறிகளுக்கான மாணவர்களின் பெயர் விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை.

மேற்படி கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரம் அடங்கிய பட்டியல் விரைவில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

### உயிரியல் விஞ்ஞானம்

என்.பரராஜசிங்கம், ஏ.மாணிக்கவாசகர், ஜே.மேனகா, ஜே.நவரத்தினம், என்.மகாதேவன், ஏ.என்.ஆர். ரமணன், ஏ.சிவதாசன், எஸ்.வசீதரன், எம்.தனுஷன், எம்.பிரதீஷ்.

கே.ராஜேந்திரன், ஜே.எஸ்.மரியதாஸ், எஸ்.ஜெயசக்தி, எஸ்.அம்பிகை, எஸ்.டினோஜ், ரி.ரஜிந்தன், ரி.காயத்ரி, எம்.சிவேந்திரன், எஸ்.கிருபானந்தகுமாரன், ரி.சுதர்சினி.

எம்.பிரார்தனா, வி.வஜீந்த், எஸ்.மகேஸ்வரன், கே.சின்னராஜா, ஏ.தெய்வேந்திரன், ஜீ.குபேரன், எல்.அழகதுரை, ரி.சற்குணநாதன், கே.கௌசிகா, ஏ.நந்தகுமார்.

எஸ்.ராமநாதன், எஸ்.பி.ஐ.ஜே.எம். நிர்மலின், ரி.சிவராஜா, எஸ்.சசிகரன், என்.ஐங்கரேசன், எஸ்.கலைவாணி, ஏ.பவித்திரன், எஸ்.மேரி, எஸ்.ரம்யா, ரி.வாகீசன்.

எஸ்.வினோஜா, ஜே.ஜெனிட்டன், யூ.சிவபரஞ்சோதி, ஏ.ஐங்கரன், ஏ.பகீரதன், எஸ்.மதனராஜா, ஆர்.ஆர்.ரமேஷ், கே.கிரிசாலினி, எஸ்.வி.றிவால், வை.ஹேமச்சந்திரன்.

ஏ.எம்.எஸ்.குரூஸ், எஸ்.பிரதீபன், வை.கௌரிநேசன், எஸ்.ராஜகரன், எஸ்.சுரேந்திரன், கே.சிறிஸ்கந்தராசா.

### முகாமைத்துவ கற்கை நெறி

என்.சிறிஸ்கந்தராஜா, ஆர்.சிவதர்சன், ஆர்.ரமேஷ், ரி.மலைமகன், எல். நிருஷா, ரி.சுரேஷன், கே.கிரிதரன், எஸ்.ஹேமமாலினி, ஏ.ஆறுமுகம், எஸ்.சுகன்யா.

ஜீ.இராஜசேகரம், என்.சரத்குமார், எஸ்.துளசிகா, கே.பிரதீபன், எஸ்.கிருஷ்ணசந்திரன், எஸ்.பரமேஸ்வரி, வி.வேலாயுதபிள்ளை, ரி.வடிவேல், பி.தேவரதன், கே.ஏ. நிரோஜினி.

என்.மயூரன், ஆர்.வித்யா, ஏ.மயூரதன், என்.லோகிதா, எஸ்.சோபிதன், ரி.ரகுநன், ஆர்.ஜனன், வி.ஆரவி, ஆர்.பிரதீபன், எம்.மயூரா.

எம்.ராகவன், ஏ.சயந்தன், கே.ஷர்மிளா, ரி.குருபரன், ஆர்.செல்வசந்திரன், எஸ்.விஜயகுமார், கே.சிவானந்தம், ரி.சுபேஷ், கே.கௌரீகன், கே.தருமரத்தினம்.

கே.சுஜீவன், ரி.ஜெகதீஸ், எஸ்.ஜமுனா, எம்.சொரூபினி, கே.விஜயமதன், வி.சாலினி, ஆர்.ஹரீந்திரன், எம்.காந்திதிலகர், ரி.திருமாலினி, எஸ்.கஜன்.

கே.எல்.லியான், என்.மகேந்திரலிங்கம், ஏ.ஜெகந்தன், ஏ.வித்தியாசாகரன், ஈ.லோகரூபன், எஸ்.சிறீஸ்கந்தராஜா, சி.சிவப்பிரகாஷ், ஆர்.வாமதேவன், ரி.சிவகணேஷ், எல்.மயூரன்.

ஏ.விக்னேஸ்வரன், கே.சோதிநாதன், ஆர்.டிசாந்தன், என்.ராம்கோபால், சி.சி.வினித்திரா, ரி.கந்தசாமி, வை.பிரேம்நாத், ஆர்.ஆறுமுகம், சி.சிவதர்சன், ஜே.உதயதர்சிகா.

பி.மனோராஜ், ரி.தனுஷா, ஏ.அனுஷ்ரா, எஸ்.லக்ஷ்மிகாந்தன், ரி.நிஷாந்தன், பி.மகாலிங்கம், என்.அம்பிகாபதி, எல்.பத்மநாதன், எஸ்.ஆர்.சுமித்திரன், பி.கணேசர்.

எஸ்.சிவசோதி, ஆர்.நிருஜா, எஸ்.வளர்மதி, கே.மயூரதன், ஏ.திலீப்காந்தன், கே.பிரதீபா, என்.பிரசண்ணா, எஸ்.இரத்தினசிங்கம், ரி.சுகந்தினி, ஜே.நிமல்ராஜ்.

எஸ்.காண்டீபன், எஸ்.கலைவாணி, எஸ்.கம்சிகா, எஸ்.சபேசன், எம்.சி.ராம்சீன், எம்.சிவமணி, கே.சிவகுமார், கே.சுரேஷ்குமார், வி.செந்தூரன், ரி.அனுஜன்.

டி.சூரியகுமார், ஏ.பிரதாப், எம்.விஜிதன், ஆர்.பார்த்திபன், ஜீ.பிரதீபன், கே.கதிர்ச்செல்வன், எஸ்.கஜவதனன், எஸ்.வசீகரன், எம்.ஆர்.பீரிஸ், எஸ்.சுபாஜினி.

ஆர்.ஆரோக்கியநாதர், எஸ்.சுதர்சன், ஆர்.திரவியநாயகம், ஜே.நிரஞ்சனா, எஸ்.சிவராஜா, எஸ்.லலிதசக்தி, பி.பாலகுமாரன், ஏ.ஆர்.ஐ.சி.றிவின்.

### வர்த்தகத்துறை

ரி.சுதர்சினி, எம்.சுமன், ரி.விதுஷா, கே.ராஜேந்திரன், எஸ்.பாலச்சந்திரன், ஏ.நிரேஷ், கே.பிரகலாதன், எஸ்.கிருத்திகா, கே.திருச்செல்வம், ஏ.சஞ்சீவ்.

கே.கிரிஜா, ரி.சர்மிலா, ஆர்.மேனகா, ஆர்.புவேந்திரன், பி.யோகநாதன், பி.குகநேசன், எம்.அனுஜா, ரி.நிசாந்தன், எஸ்.சிறிறங்கன், ரி.டி.ராமசாமி.

ஆர்.ஜனனி, கே.சுகந்தராஜ், ஆர்.நிரூபன், எஸ்.சுந்தரலிங்கம், வி.கோபி முகுந்தன், கே.அன்னலிங்கம், எஸ்.வினோதன், எஸ்.குமார்.

### மருத்துவம்

எம்.சரவணபவானந்தன், கே.நிருத்தன், ரி.சைசானந்தி, எஸ்.பாலச்சந்திரன், பி.சதானந்தசர்மா, பி.ஏ.கனிஸ்கா, பி.கார்த்திகா, பி.மன்சுதன், கே.தர்மலிங்கம், எஸ்.விஷ்ணுகுமார்.

எம்.எம்.நிரோஷினி, என்.பிரதீபன், ரி.ஜெயராம், கே.வாருணி, ஏ.திலீப்குமார், கே.தர்சனன், எஸ்.பேரின்பநாதன், கே.கோபிநாத், ஜே.பரமராஜா, ரி.ஹேமலதா.

ஏ.ஜே.எம்.அருள்சோதி, ஆர்.எம்.எம்.தீபன், ரீ.மதீசன், எம்.சிவசங்கர், எம்.தனுஜா, ஜே.கல்யாணி, ரி.திவாகர், பி.சத்யரூபன், எம்.விஷ்ணுகாந்த், வை.பிரசன்னா.

பி.சதீஸ், எஸ்.சுனந்தா, ஏ.அபிராமி, எம்.உமாநந்தினி, ஆர்.வித்யா, ஜீ.நிரோஜன், ரி.ஐங்கரன், ரி.சீவரத்தினம், கே.இளங்கோவேள், எஸ்.நித்தியரூபன்.

ஆர்.பவுத்திரா, வி.இளங்குமாரன், வை.சிவப்பிரகாசம், ஏ.துஷ்யந்தி, எஸ்.குமரன், எஸ்.பாலனா வேற்பிள்ளை, பி.அசோதை, ஆர்.ஹேமபால, வை.திவ்யா, ரி.கோகுலன்.

எஸ்.சாரங்கன், வி.சுஜீவ், டி.சிவலிங்கம், ரி.தவரத்தினம், வி.பாக்கியநாதன், ரி.விமலகாந்த், ஜீ.கார்த்திக், எஸ்.சிவசங்கரி, எம்.தர்மராஜா, எம்.நர்மதா.

எஸ்.பிரபுசங்கர், வை.முரளிதரன், எஸ்.ஜிசாந்தன், எஸ்.கிருசாந்தன், எஸ்.கம்சன், எம்.மணிவண்ணன், ஆர்.துவாரதீபன், கே.உதயசீலன், எஸ்.பிரியதர்சினி, வி.பவித்ரா.

எஸ்.வசீகரி, எஸ்.சிறிசுபாகரன், ஏ.சி. அருள்நேசன், டபிள்யூ.ஜே.தயானி.

### சித்த மருத்துவம்

ஆர்.உமாபிரியதர்ஷினி, எம்.சுதர்ஷன், எஸ்.சிந்துஜா, ஜி.தர்ஷினி, பி.தாட்ஷாயினி, எஸ்.தேவதர்ஷிகா, எம்.நிவேதினி, எம்.ரஜீவாசன், ரி.பொன்னையா, எஸ்.தனராஜி.

கே.அபர்ணா, எஸ்.சிவதர்சினி, எம்.ஏ.எவ்.சில்மியா, ரி.குணரத்தினம், எஸ்.ஜனகன், பி.பிரதீபன், எஸ்.சிவதாசன், எஸ்.சுகனியா, ஆர்.கைலாயலிங்கம், என்.கஜித்ரா.

பி.நிஷாந்தி, எஸ்.தனுஷிகா, ஏ.குமுதா, எம்.எஸ்.எம்.சர்மன், எஸ்.அஷோக், ஆர்.ரிஷான், எஸ்.ஹரிசங்கர், எஸ்.நிலுஷினி, கே.பிரதீப், கே.சங்கீதா.

பி.பிரஷாத், பி.கலைமதி, ரி.சக்திவேல், வி.தனேஸ்குமார், யு.திலீபன், வி.சரவணபவான், கே.பொற்கொடி, ஏ.எழில்நிலா, ஜே.தணிகாசலம், ஏ.எல்.எம்.சஃப்ராஸ்.

ஜே.பகீரதன், சி.கிஷாந்த், எம்.ஏ.அலிம், பி.சிந்துதாரணி, கே.குருநாதபிள்ளை, ஏ.மலரினி, சி.எஸ்.தேவேந்திரன், ஜி.தவசீலன், எஸ்.மயூரன்.

### சட்டத்துறை

எம்.என்.பி.ஜெயராஜ், ஜே.பி.ஏ.றஞ்சித்குமார், சி.என்.பர்னாந்து, வை.யோகரட்ணம், எஸ்.சுகன்ஜா, எம்.சிறில்ராஜ், வி.சாரங்கன், வி.சண்முகநாதன், பி.உமாகாந்தன்.

எம்.தர்மராஸ், ரி.சாமலே, பி.இலோர்நாயகம், கே.உதயலதா, ஏ.கோசலரூபிணி.

### விவசாயத்துறை

ரி.ஜெயதாசன், எஸ்.நாகரட்ணம், பி.நிரூபன், ஏ.மகாதேவன், கே.சசிமாதன், ரி.பிரவீணா, வி.விஜயராஜ், எம்.தர்சினி, எஸ்.சயந்தன், எம்.தர்மலிங்கம்.

எம்.ஜெயசுதன், கே.விக்னேஸ்வரமூர்த்தி, எஸ்.பிரசாத், பி.லோகநாதன், என்.செல்லையா, எவ்.செர்லினாமேரி, எஸ்.கந்தசாமி, எம்.உசாகரன், எம்.முகுந்தன், கே.சுஜிதா.

என்.லயந்தினி, வி.நிருஷா, பி.ஆர்.பி. பெர்னாண்டோ, ரி.கபிலன், எம்.கைலாயன் கிருச்செல்வம், எம்.பேரம்பலம், பி.கலைமாறன், எஸ்.தங்கராஜ், எம்.டிசிதா, ரி.ஜெயசுந்தர்.

யு.கெங்காதரன், எஸ்.அம்பிகா, எஸ்.ரிஷாந்தன், எம்.பிரியதர்சினி, எஸ்.கார்த்திகா, ரி.கதிரவேல், எஸ்.பிரியந்தி, ஆர்.கார்கென், ஜே.தவராஜா, ஜி.கணேசமூர்த்தி.

கே.ராஜகாந்தன், ரி.ஜோசப்குமார், என்.ரவிந்தன், கே.ஜானகி, பி.உமாகினி, ஏ.வரோதயன், இ.நாகராசா, வி.எம்.மதனன், எம்.எம். சந்தியா, எஸ்.சந்திரிகா.

என்.வாகீசன், என்.தேவகுமார், கே.கார்த்திகா, ஆர்.அர்ச்சனா, ஜே.என்.பி. அமலரூபன், கே.நிஷா, எம்.வரோதயன், கே.ராஜேந்திரன், டி.கே.தயாபரராஜா, டி.சி.அரவிந்தராஜ்.

எஸ்.நவரத்தினம், பி.மீனுஜா, ஜி.பஞ்சகரன், பி.சுசானா, கே.ஜெயவாணன், எம்.முருகதாஸன்.

### சித்திரமும் வடிவமைப்பும்

ஏ.எம்.எம்.முபித், ஜே.சிவகுமார், ரி.கிருஷ்ணகுமார், கே.கலாமேகன், கே.ஜெயசீலன், ஜே.எம்.மகேஷ், ஆர்.திலீபன், எம்.றெஜினோபன், ஜே.சொகைபூ, கே.சிறிகாந்த்.

எம்.ஜெயமாலன், ஆர்.ராஜ்குமார், கே.நிமலதீபன், எஸ்.ராகுலன், எம்.தமீரா, பி.ஜெயதீபன், கே.விக்னேஸ்வரன், என்.திஸானா, ஆர்.சிவராம், ஏ.உதயகுமார்.

வி.வசந்தரூபன், கே.நிஷாந்தன், வி.கலைச்செல்வன், பி.நிரஞ்சன். (து)

# பாவனையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சம்மேளனம் உருவாக்கம்

(கொழும்பு)

பாவனையாளர் முகங்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நாடளாவிய ரீதியில் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கை நுகர்வோர் சம்மேளனம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இச்சம்மேளனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற சர்வதேச நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சரத் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இச்சம்மேளனத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது.

அப்போது இதன் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் சகல கிராம மட்டத்திலும் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## இன்று ஒரு தகவல்

# இன்ரர்நெற் இல்லறம்

ஒரு திருமணம் நடக்க வேண்டுமென்றால் பெண்ணும் மாப்பிள்ளையும் பக்கத்துப் பக்கத்தில் உட்காரவேண்டும். அப்போது தான் தாலிகட்ட முடியும். மோதிரம் மாற்றிக்கொள்ள முடியும் அல்லது மாலையாவது மாற்றிக் கொள்ள முடியும். அறிவியல் முன்னேற்றம் இனிமேல் அந்த அவசியமும் வேண்டாம் என்று சொல்கிறது.

ஆளுக்கு ஒரு ஊரில் இருந்தாலும் கூட இன்ரர்நெற் மூலமாகத் திருமணம் செய்துகொள்ளலாமாம். திருமணப் பத்திரிகை கூட அடிக்க வேண்டியதில்லை. கையடக்கத் தொலைபேசியிலேயே அழைப்பு விடுக்கலாம். திருமணத்திற்கு வருபவர்கள் கூட ரயில் ஏறி, பஸ் ஏறி திருமண மண்டபத்தைத் தேடிக் கண்டுபிடித்து வந்து சேரவேண்டிய அவசியமில்லை. அவரவர் வீட்டிலேயே கணனி முன்பாக வந்து உட்கார்ந்தால் போதும். அங்கே இருந்தே வாழ்த்துச் சொல்லிக்கொள்ளலாம்.

நியூயோர்க்கில் ஜோய்ஸ்- எரிக் இருவரும் ஈமெயில் மூலம் நண்பர்கள் ஆனார்களாம். அதன்பின் நேரில் சந்தித்துக்கொண்டார்களாம். "நமது திருமணம் புது முறையில் நடக்க வேண்டும். ஏராளமான மக்கள் அதைப் பார்க்க வேண்டும் "என்பது அவர்களின் ஆசை. அதனால் இன்ரர்நெற்றின் ஒன்லைன் வெடிங் மெகசின் வெப்சைட்டைத் தேர்வு செய்தார்கள்.

அதில் மனதில் தோன்றியதை கணனி கீபோர்ட்டில் ரைப் செய்து திருமண ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். மணப்பெண் அலங்காரம் செய்துகொண்டு அப்பா அம்மாவையும் அழைத்துக்கொண்டு நியூயோர்க்கில் டைம் சதுக்கத்தில் அங்கேயுள்ள ஒரு கணனி முன்பு வந்து உட்கார மறுமுனையில் புளோரிடாவில் மணமகன் கணனி முன்பு உட்கார்ந்திருந்தார்.

வெப்சைட்டில் இரண்டு பேரும் சந்தித்தார்கள். கடைசி நிமிடத்தில் கூட உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கையடக்கத் தொலைபேசியில் அழைப்பு... "எங்கள் திருமணத்திற்கு நீங்கள் அவசியம் வரவேண்டும். உடனே உங்கள் கணனியில் வந்து எங்களை வாழ்த்துங்கள்" என்று மணமகள் கீபோர்ட்டில் ரைப் பண்ணிய செய்தி என்ன தெரியுமா? "இந்த நன்னாளில் உன் தரப்பில் இருந்து எனது வாழ்க்கையை வாழ்வேன் என்று உறுதி அளிக்கிறேன். உனது உண்மையான அன்புக்கு எனது அழகான பரிசு இதுதான்"இதுதான் மணமகள் ஜோய்ஸ் சுல்மான் அனுப்பிய செய்தி.

பதிலுக்கு மணமகன் எரிக்சோகன் அனுப்பிய செய்தி "ஜோய்ஸ் எனது அன்பை உனக்கு வெளிப்படுத்தும் நெருக்கமான செயலுக்கு வந்துவிட்டேன். உன்னை நான் நேசிக்கிறேன் உன்னிடம் என்னை முழுமையாக ஒப்படைக்கிறேன் வாழ்நாள் முழுவதும்"இந்தச் செய்திப் பரிமாற்றத்துக்குப் பின்பு திருமணம் முடித்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்த சைட்டில் காதலர்களுக்கும் தம்பதிகளுக்கும் ஏராளமான அறிவுரைகள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையன்று இந்த சைட்டில் திருமணங்களை நடத்தி வைக்கிறார்களாம். ஆண்டுக்கு 23 இலட்சம் பேர் இந்த சைட்டின் மூலமாக திருமணம் செய்யலாம் என்று திட்டமிட்டிருக்கிறார்களாம்.

பாாத்தீர்களா? கணனி வந்து கல்யாணம் என்ற ஒரு பெரிய விடயத்தை எவ்வளவு சுலபமாக்கிவிட்டது பாருங்கள். இதுபோன்ற திருமணங்கள் அதிகமாகிவிட்டால் நம் ஊரில் சிலருக்கு மிகவும் கஷ்டமாகி விடும். அப்படிப்பட்டவர்கள் யார் தெரியுமா?

ஒரு திருமண மண்டபத்தில் நடந்த திருமணத்திற்குப் போன ஒருவர் திரும்பி வந்துகொண்டிருக்கிறார். எதிரில் வந்த நண்பர் இவரைப் பார்த்துவிட்டு "திருமணத்திற்குப் போனாயே... ஜோடிப் பொருத்தம் எப்படி? " என்று கேட்டார். "அவசரத்தில் எடுத்தேன்.,. இரண்டும் ஒரே கால் செருப்பாகப் போய்விட்டது" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழ் மக்களை முட்டாள்களாக எண்ணுகிறதா சர்வதேச சமூகம்?

## தமிழீழ விடுதலைப் புலிகள் கேள்வி

(கொழும்பு)

**ஜெனீவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் மே 15ஆம்திகதி வரை 175 தமிழர்கள் நீதிக்குப்புறம்பான வகையில் படுகொலை செய்யப்பட்ட போதும் சர்வதேச சமூகம் மௌனம் காப்பதன் மூலம் தமிழர்களை முட்டாள்களாக கருதுகிறார்களா என்று தமிழீழ விடுதலைப் புலிகள் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளனர்.**

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், .

ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் ஏப்ரல் 8ஆம் திகதி வரையிலான படுகொலைகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் முன்னர் விவர அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

ஏப்ரல் 8 ஆம் திகதிக்குப் பின் மே 15ஆம் திகதி வரையிலான படுகொலைகள் விபரம் இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஜெனீவாப் பேச்சுக்கள் நிறைவடைந்த நாள் முதல் தமிழ் மக்கள் மீதான படுகொலைத் தாக்குதல்கள் தொடங்கின.

பெப்ரவரி 27ஆம் திகதியன்று ஒரு பொதுமகன் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து மார்ச் 5,6,9, 20, 22, 24, 25 மற்றும் 28 ஆகிய திகதிகளிலும் படுகொலைகள் தொடர்ந்தன.

ஏப்ரல் 7 ஆம் திகதி திருமலை தமிழ் மக்களின் பிரதிநிதி விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டார்.

அல்லைப்பிட்டியில் ஏப்ரல் 30 ஆம் திகதி 70 வயது முதியவர் ஒருவர் கடற்படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

தன்னை படுகொலை செய்ய வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டபோதும் அவரை சுட்டுக்கொன்றுள்ளனர். அவரது மகள் நீதிமன்றில் இது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

மே13 ஆம் திகதியும் அல்லைப்பிட்டியில் 13 பொது மக்களை கடற்படையினர் படுகொலை செய்துள்ளனர்.

படுகொலை செய்த நபர்கள் தங்கள் பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருந்த இரு குழந்தைகளையும் விட்டு வைக்கவில்லை. துப்பாக்கிச் சூட்டுக்குள்ளானோரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல அப்பகுதி தேவாலயத்தைச்சேர்ந்த அமலதாஸ் அடிகளார் முயன்ற போது அவரையும் கடற்படையினர் தடுத்துள்ளனர்.

இதையடுத்து அம் மக்கள் பிலிப்நேரி தேவாலயத்தில் அகதிகளாக அடைக்கலம் புகுந்துள்ளனர். விசாரணை நடத்தச் சென்ற கண்காணிப்புக்குழுவினரிடம் தங்களைக் காப்பாற்றுமாறு அம்மக்கள் கெஞ்சியுள்ளனர்.

இதே பிலிப்நேரி தேவாலயப் பகுதியில் 1990ஆம் ஆண்டுகளில் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு பலரும் காணா மல் போயினர். கைதுசெய்யப்பட்டு காணாமல் போன 300க்கும் மேற்பட்ட இளைஞர்களது சடலங்கள் அல்லைப்பிட்டி இராணுவ வலய கிணறுகளுக்குள் கிடந்தது என்று வடக்கு- கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

மே 2 ஆம் திகதியன்று சர்வதேச ஊடக நாளில் உதயன் நாளிதழின் யாழ். அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு இரு பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். நாளிதழின் ஆசிரியர்களை தேடிச்சென்ற கொலைக் கும்பல் கண்ணில் பட்ட பொருட்களையெல்லாம் கண்ணில் பட்டோரையெல்லாம் சுட்டுள்ளது.

ஆனால் இந்தத் தாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சித்திருக்கிறார். அதை உதயன் ஆசிரியர் மறுத்துள்ளார்.

மே7 ஆம்திகதி மந்துவில் ஆலயம் ஒன்றில் உறங்கிக்கொண்டிருந்த 7இளைஞர்களது சடலங்கள் எங்கே சென்றது? புதர்ப் பகுதியில் சடலங்களை அப் பகுதி மக்கள் கண்டுள்ளனர்.

சடலங்களைப் பார்வையிட கண்காணிப்புக் குழுவினர் வரவேண்டும் என்று அம்மக்கள் வலியுறுத்தியும் கண்காணிப்புக்குழுவினர் உதவவில்லை. மக்கள் அப் பகுதிக்குச் சென்றபோது சடலங்களைக்காணவில்லை.

ஜோசப் பரராஜசிங்கத்தின் இடத்துக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினராக திருகோணமலை விக்னேஸ்வரன் அறிவிக்கப்பட இருந்தார்.

அவரைப் படுகொலை செய்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபை வேட்பாளர் வில்வராசாவையும் ஏப்ரல் 20 ஆம் திகதியன்று படுகொலை செய்தனர்.

ஏப்ரல் 27ஆம் திகதி வவுனியா உள்ளூராட்சி சபை வேட்பாளர் செந்தில்நாதனை துணை இராணுவக் குழுவினர் படுகொலை செய்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப்பகுதிக்குள் எட்டுக் கிளைமோர்த் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. 7 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் . பலர் படுகாயமடைந்துள்ளனர்.

மே 15ஆம் திகதியன்று வவுனியா சேமமடுவில் நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு காட்டுப்பகுதிக்குள் வேட்டைக்கும் மரங்களை வெட்டவும் செல்லுகின்ற அப்பாவிப் பொதுமக்களையும் படைத்தரப்பினர் படுகொலை செய்துள்ளனர்.

காட்டுப்பகுதியில் இரு வேறு சம்பவங்களில் 5பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஜெனீவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் 174 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அரச படைகளினால் நிகழ்த்தப்பட்டு வரும் இந்த நீதிக்குப் புறம்பான படுகொலைகளை சர்வதேச சமூகமும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தடுக்கவில்லை.

இப் படுகொலைகளை சர்வதேசசமூகம் ஏன் தடுக்காமல் அமைதி காக்கின்றது. அப்படியானால் தமிழர்கள் என்ன முட்டாள்களா? என்ற கேள்வியுடன் ஜெனீவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் மே 15ஆம் திகதி வரை படுகொலை செய்யப்பட்டோரின் பெயர் விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றையும் அரசியல்துறை தலைமையகம் வெளியிட்டுள்ளது. (க)

# பாதுகாப்பு குறித்த செய்திகளை வழங்கும் மையம் உருவாகும்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு தொடர்பான அனைத்து செய்திகளையும் ஊடகங்களுக்கு வழங்கும் மையம் விரைவில் உருவாக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பாக முரண்பட்ட செய்திகள் வெளியிடப்படுவதால் சில அமைப்புகள் நன்மையடையும் நிலை உருவாகியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதனைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு விடயங்கள் குறித்து தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய சகல வசதிகளை க் கொண்ட மையம் ஒன்றை எதிர்வரும் சில தினங்களுக்குள் அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர் இந்த மையத் துடன் 24 மணி நேரமும் தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

இதவேளை, தமிழர் தாயகத்தில் நடைபெறும் படைகளின் படுகொலைகள் மற்றும் சித்திரவதைகளை ஊடகங்கள் வெளியிடுவதைத் திசை திருப்பும் நோக்கில் இந்த மையத்தை அரசு உருவாக்கவுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றார்கள். (க)

# இந்தியா சென்ற 13பேர் கடற்படையால் கைது

தலைமன்னார்க் கடற்பரப்பில் 13 பேர் கடற் படை யினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. திருகோணமலை திருக்கடலூர் என்னும் இடத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கையில் யுத்தச் சூழல் உருவாகியதால் இங்கிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு படகொன்றில் சென்ற வேளையே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர்களை கடந்த திங்கட்கிழமை மன்னார் பொலிஸார் மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் பிரபாகரன் முன் ஆஜர்ப்படுத்தினர்.

இவர்களை விசாரித்த நீதவான் குறித்த நபர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இதேவேளை, இவர்கள் பயணித்த படகின் ஓட்டுனர்கள் இருவருமே தலா 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (க)

# தீவகப் படுகொலை விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் ஆயதபாணிகளினால் குழந்தைகள், பெண்கள் உட்பட 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட மரணங்கள் தொடர்பான மரண விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜெயராமன் ரொட்ஸ்கி முன்னிலையில் இந்த விசாரணை இடம்பெற்றபோது வேலணையில் சுட்டுக்கொல்லப்பட்டவராகிய 24 வயதுடைய இரத்தினம் செந்தூரன் என்பவரது மரணம் தொடர்பாக அவரது தந்தை சகோதரன் சகோதரி ஆகியோர் சாட்சியமளித்துள்ளனர்.

இதே பகுதியில் நடைபெற்ற ஏனைய கொலைகள் தொடர்பான மரண விசாரணைகள் நாளை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந-5)

# இளைஞனைக் காணவில்லை

கோப்பாய் கிழக்கைச் சேர்ந்த விஸ்வலிங்கம் பரணிதரன் (வயது -29) என்பவரை கடந்த 14ஆம் திகதி முதல் காணவில்லை என அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் சம்பவதினத்தன்று நீர்வேலியில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்ற சமயமே காணாமல் போனதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. (க)

# டெங்கு நோய்க்குரிய அறிகுறி

உக்கிரமான காய்ச்சலுடன் கண்கள் சிவப்பு நிறமாகி மூக்கினாலும் மலசலத்தினூடாகவும் இரத்தம் வெளியேறினால் அது டெங்கு நோய்க்குரிய அறிகுறியாகும்.

இவ்வாறு காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.பாரூக் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய் பெரும்பாலும் அதிகமாக சிறுவர்களையே பாதிக்கும். டெங்கு காய்ச்சல் பீடிக்கப்பட்டவருக்கு பூரண சிகிச்சை கிடையாது. உப சிகிச்சைகளே உள்ளன. இது ஆபோவைரஸ் கிருமியால் ஏற்படும் நோயாகும். இந்த வைரஸ்களை ஈடிஸ் ஈஜிப்டிஸ், ஈடிஸ் அல்போபிக்டஸ் ஆகிய இரு நுளம்பினங்கள் காவுகின்றன.

இவை சுகதேகியைக் கடிக்கும் போது நோய் ஏற்படலாம். சாதாரண டெங்கு காய்ச்சலெனின் கடும் காய்ச்சல், தலைவலி, உடல்வலி, வயிற்றுளைச்சல் போன்ற அறிகுறிகளாகும். இந்நோய் 3, 4 தினங்களில் குறைந்து நோய் குணமாகலாம்.

ஆனால் இரத்தப் பெருக்குடனான டெங்கு காய்ச்சல் அபாயமானது. இது உக்கிரமான காய்ச்சல். கண்கள் சிவப்பு நிறமாதல், தோலில் சிவப்பு புள்ளிகள் தோன்றுதல், மூக்கினால் இரத்தம் கொட்டுதல், மலசலத்தினூடாக இரத்தம் வெளியேறுதல், வாந்தி அல்லது மலம் கறுப்பு நிறமாகுதல் போன்றன அறிகுறிகளாகும்.

டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவரின் காய்ச்சல் திடீரென குறைந்தால் நிலைமை பாரதூரமாகும். உடம்பு குளிராதல், உடல் வெளிறிப்போதல், குழப்பமான தூக்கமான நிலை, மூச்செடுப்பு, நாடித்துடிப்பு அதிகரித்தல் போன்றன தோன்றலாகும். (கு-9)

# துப்பாக்கிச் சூட்டில்—காயமடைந்தவர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மருத்துவமனையில் நோயாளர் விடுதியில் இடம்பெற்ற தாக்குதலில் படு காயமடைந்த சுரேஸ் (வயது-24) என்பவர் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

பொலநறுவை எல்லைக் கிராமத்தில் கருணா குழுவினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக படுகாயமடைந்த நிலையில் பொலநறுவை மருத் துவமனையில் காயமடைந்தவர்கள் பலர் அனுமதிக்கப்பட்டு பின்னர் அதில் சிலர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் மாற்றப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை இவர்கள் மீது அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சுரேஸ் என்ற உறுப்பினர் படுகாயமடைந்திருந்தார். எனினும் சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-9)

# சமூக மேம்பாட்டில் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் பங்கு

*நூலக விழிப்புணர்வு நிறுவகம் இன்று தனது முதலாவது அகவையைப் பூர்த்திசெய்வதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.*

தகவல் யுகத்தின் சவால்களை எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்ற சமூகங்களில் ஒன்றாக எமது சமூகமும் வந்துவிடுமோ என்ற அச்சமும், நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ்சமூகம் தனது நிலையிலிருந்து கடுகதியில் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற நிலைகண்டு ஏற்பட்ட அங்கலாய்ப்பும் ஏற்படுத்திய தூண்டுதலே நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் தோற்றத்துக்கு வித்திட்டது. இதன் தோற்றத்திற்கு வித்திட்டவர் யாழ்.பல்கலைக்கழக கல்விசார் நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் ஆவார்!

தமிழ்ச்சமூகம் முன்னேற வேண்டும் என்ற நோக்கில் சமூக மேம்பாட்டிற்காக வாசிப்புத்திறன் மிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற பேரவாவினால் தூண்டுதலால் சமூக சேவையாக ஒப பணியை நூலகவியல் இறுதி நிலை மாணவர்களின் ஒத்துழைப்புடன் கடந்த ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இந்நிறுவகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஸ்ரீகாந்தலட்சுமியைத் தலைவராகக் கொண்டு சமூதாய முன்னேற்றத்திற்காகச் சேவையாற்றி வரும் இந்நிறுவனம் தற்போது மரமாகி கிளைபரப்பி அறிவுத் தேடலுக்கான வாய்ப்புக்கள், வசதிகளை உருவாக்கியுள்ளதுடன் சமூகத்தை மேம்படுத்தல், அறிவு, ஆற்றல், அனுபவம் என்பவற்றைச் சமூகப் பயன்பாட்டிற்கு வழங்கல் என்பனவற்றுக்கான வாய்ப்புக்களையும் உருவாக்கியுள்ளது. அத்துடன் பொருளாதார, சமூக துன்பியல் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கான வாசிப்பினை மேம்படுத்துவதற்கான உதவிகள் ஒத்துழைப்புக்கள் வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், நூலகம் சார்ந்த விழிப்புனர்வை மாணவர்கள், பொதுமக்கள், நிர்வாக அமைப்புக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளது.

இப் பணியின் முதற்கட்டமாக மாதந்தோறும் 'நூலுக்கோர்மாலை' என்ற நிகழ்வை நடத்தி வருகின்றது. அத்துடன் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் நூலக உதவியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறையொன்றைக் கடந்த நவம்பர் மாதத்தில் நடத்தியதன் மூலம் தரமான சேவையாகச் சமூதாயத்திற்கு வழங்கும் ஊக்கியாகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இத்துடன் மட்டும் நின்றுவிடாது அதற்கு மேல் ஒரு படிமேலே சென்று பின்தங்கிய நூலகங்களுக்கு நூல்கள், தளபாடங்கள் போன்றவற்றையும் வழங்கி வாசிப்பின் மகிமையை உணரச் செய்கின்றது.

இவ்வாறான செயற்பாடுகளின் ஒருபடியாக இந் நிறுவகத்தின் தலைவரால் எழுதப்பட்ட 'நூலகப் பகுப்பாக்கம் நூலகர் கைநூல்' நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் வெளியீட்டுப்பிரிவினரால் கடந்த 19.3.06ஆம் திகதி யாழ். பொது நூலக கேட்போர் கூடத் தில் வெளியிட்டு வைக்கபட்டமை இம் மண்ணின் சிறப்பிற்குரியதும் பாராட்டப்படவேண்டியது மான ஒரு விடயமாகும். இன்றைய தகவல் யுகத்திலே பல்கிப் பெருகி வரும் நூல்கள் பற்பல. இவை அனைத்தையும் ஒழுங்கமைத்து வாசகர்க்கு சிறந்த சேவையாற்ற இந்நூல் உதவுகின்றது.

பகுப்பாக்கத்துறையில் தேர்ச்சி பெறவிரும்புகின்ற நூலகத்துறையினருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். அத்துடன் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு பொது அறிவு பரீட்சை ஒன்றினை நடத்திப்பரிசில்கள் வழங்கியமை வாசகர்க்கிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிறு வகம் வடமராட்சி ஆசிரிய நூலகர்களுக்கான நூலகவியல் சார்ந்தபயிற்சிப் பட்டறை, கருத்தரங்கு என்பவற்றை கடந்த 5, 6, 7ஆம் திகதிகளில் நடத்த எண்ணியிருந்த போதிலும் சூழ்நிலை காரணமாக இந்நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 'சுடச் சுட ஒளிரும் பொன்' போல இந்நிறுவகத்தின் பணி மேலும் மேலும் விரிவடைய வாழ்த்துவோம்.

**திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன்**
**நல்லூர் கிளை நூலகம்**

# அதிகரிக்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் வருட இறுதியில் இருந்து வழங்கப்படும்

(கொழும்பு)

இடம்பெயர்ந்து வாழும் பொது மக்களுக்கு 50சதவீதத்தால் அதிகரிக்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் இவ்வருட இறுதியிலிருந்து வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக மீள்குடியேற்ற அமைச்சு சகல நடவடிக்கைகளையும் மேற்கெண்டு வருவதாக அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். உத்தேச திட்டத்தின் படி 5பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு தற்போது ஆயிரத்து 260 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களே வழங்கப்பட்டு வருகின்றன. இத்தொகை ஆயிரத்து 890ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போது 4 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு ஆயிரத்து 8 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இத் தொகை ஆயிரத்து 512 ரூபாவாக அதிகரிக்கப்படும். 3பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 840 ரூபா பெறுமதியான பொருட் களே வழங்கப்படுகின்றன. அத்தொகை ஆயிரத்து 260ரூபாவாக அதிகரிக்கப்படும்.

இருவர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 616ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களே வழங்கப்படுகின்றன. அத் தொகை 924 ரூபாவாக அதிகரிக்கப்படும். தனி நபர் ஒருவருக்கு வழங்கப்படும் 336ரூபா பெறுமதியான உணவுப்பொருட்கள் 504ரூபாவுக்கு வழங்கப்படும். தற்போதுள்ள உணவுப்பொருட்களின் விலையை அடிப்படையாகக் கொண்டு இந்த புதிய கொடுப்பனவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடகாலமாக இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்ற நிவாரணத்தை அதிகரிப்பது சம்பந்தமாக மீள்குடியேற்ற அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து ஜனாதிபதி இந்தக் கொடுப்பனவு அதிகரிப்பை வழங்குவதற்கு இணக்கம் கண்டுள்ளார்.

1990ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணம் அதிகரிக்கப்பட வேண்டிய காரணங்களை அமைச்சர் றிஷாட் தெரிவித்துள்ளார்.

புதிதாக அதிகரிக்கப்பட்ட நிவாரணத் திட்டத்துக்கமைய வருடமொன்றுக்கு அரசாங்கத்திற்கு 720மில்லியன் ரூபாய் செலவிடப்பட வேண்டியுள்ளதாக சுட்டிக்காட் டியுள்ள அமைச்சர், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொண்ட உடன்படிக்கையில் இவ் விடயமும் உள்வாங்கப்பட்டிருந்ததால், அந்த வாக்குறுதிக்கு அமைய இதனை ஜனாதிபதி தற்போது செயல்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (க-9)

## மற்றுமொரு சந்தேகநபரை கைதுசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் கொலை தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபரை கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இந்தக் கொலை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் மற்றைய சந்தேக நபரான விஸ்வநாதன் தம்பிரவி என்பவரை தாம் கைதுசெய்யவுள்ளதாகவும் அவரைத் தேடும்பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-9)

### வவுனியா மாவட்டத்துக்கான

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது

வவுனியா நகரசபை மற்றும் வவுனியா சிங்கள பிரதேசசபைக்கான உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த இந்த தேர்தலைப் பிற்போடுவதற்கு நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி நடாத்தப்படுமெனவும் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் உட்பட ஏற்கனவே திட்டமிடப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருப்பதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமணசிறி தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படும் அபாயம் உள்ளதாம்

## சர்வதேச மன்னிப்புச்சபை எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படும் அபாயம் எழுந்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரித்துள்ளது. இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்துள்ள அறிக்கையில்,

தற்போது இடம்பெறும் வன்முறைகள் காரணமாக நடைமுறையில் உள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் முறிவடையும் ஆபத்தில் உள்ளது. கடந்த மாதங்களில் மாத்திரம் 200பேருக்கு மேற்பட்டோர் வன்முறைகளில் பலியாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பொது மக்களாவர். சுமார் 2 ஆயிரம் பேர்வரை தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

கடந்த மே மாதம் 13ஆம், 14 ஆம் திகதிகளில் மட்டும் வடக்கிலும், கிழக்கிலும் 18 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர். கடற்படையினரின் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள ஊர்காவற்றுறையில் மாத்திரம் 13பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த கொலைகள் தொடர்பாக உடனடி விசாரணைகளை நடத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. எனினும் இந்த விசாரணைகளை அரசாங்கம் பக்கச்சார்பற்ற விதத்தில் நடத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் அரசாங்கம், அரசியல் தொடர்பான சர்வதேச ஒழுங்குகளின் அடிப்படையில் இந்த விடயங்களை கையாள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தக் கொலைக்கு படையினரே பொறுப்பு என்று குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனினும் சர்வதேச அனுதாபத்தைப் பெறுவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளே இந்தக் கொலைகளை மேற்கொண்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் எமக்கு கிடைத்த தகவலின்படி படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுத தாரிகளே இந்த பிரதேசத்திலிருந்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் சர்வதேச சட்டத்தின் கீழ் இவ்வாறான கொலைகளை தடுக்க வேண்டியதும் அவசியம். அத்துடன் இலங்கையில் கொலைகளை தடுக்கும் முகமாக அரசாங்கம், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மற்றும் ஆயுதக் குழுக்கள் என்பன பொதுமக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டுமென்றும் சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது. (க-9)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

# மீள்பார்வை

43



## மீண்டும் விசாரணை

நீதிமன்ற வாயிலில், வின்னியிடமிருந்து விடைபெற்றுக் கொள்ள அனுமதித்தனர். மக்கள் சுதந்திரப் போராட்ட முழக்கங் களை எழுப்பினார்கள். மண்டேலாவை வண்டியில் ஏற்றிக்கொண்டு சிறையை நோக்கி விரைந்தனர்.

## மீண்டும் சிறைக்கொட்டடி

சிறைச்சாலை சுதந்திரத்தைப் பறித்து விடுகிறது. அத்துடன் மனிதர்களிடையே வேறுபாடு இல்லாமல் கூடச் செய்து விடுகிறது. ஒரே வகை உணவு, ஒரே வகை உடை, ஒரே மாதிரியான சட்டதிட்டம் சுதந்திரப் போராட்ட வீரன் தனது உரிமைகளுக்காக சிறைக்குள் போராடத் தான் வேண்டும். சிறைக்குள் வந்த பின்னர்தான் கர்னல் ஜேக்கப்பால் சோசா மேலாடையைப் பறிக்க முடிந்தது. அரைக்கால் சட்டையைக் கொடுத்தனர். முழு நீளக் கால் சட்டை வேண்டும் என்று மண்டேலா வற்புறுத்தினார் ஆறிப்போன கஞ்சியையும் மண் டேலா மறுத்தார். இதற்கு கர்னல் ஒரு மாற்று வழி சொன்னார். தனிக் கொட்டடியில் அடைக்கப் பட ஒப்புக்கொண்டால் நீளக் கால் சட்டையும் சுடுகஞ்சியும் தரப்படும் என்றார்.

மண்டேலா ஒப்புக்கொண்டார். ஆனால் சில நாட்களுக்குள் தனிமை கொடுமையாக இருந்தது. எனவே மீண்டும் கைதிகளோடு சேர்ந்து இருக்க முடிவு செய்தார்.

ஆபிரிக்கா முழுவதும் சுற்றிப் பெற்ற உதவிகள் ஒரு புதுப்படையைத் தயாரிக்க எடுத்த முயற் சிகள் எல்லாம் புழுதியில் கொட்டிய பால் ஆகிவிட்டதே! மக்களோடு இருக்கவேண்டிய சுதந்திரப் போராட்ட வீரன் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் அடைபட்டுக்கிடக்கிறானே என நொந்தார் மண்டேலா.

அதே சிறையில் சுத்த ஆபிரிக்க காங்கிரஸின் தலைவர் சோபுக்வேயும் இருந்தார். அவருடன் டெபு என்ற கம்யூனிஸ்டு தொழிற்சங்கவாதியும் இருந்தார். சோபுக்வேயும் டெபுவும் அடிக்கடி காரசார மாகப் பேசி சர்ச்சையில் மாட்டிக்கொள்வர். மண்டேலாவையும் சோபுக்வேயையும் இரு முனைகளில் இருந்த அறைகளில் அடைத்து வைத்தனர். சில சமயம் சந்திக்கமுடிந்தது.

நாடு திருந்தாமல் சிறைக்குள் சீர்திருத்தம் வராது. எனவே சிறைக்குள் போராடிப் பயனில்லை என சோபுக்வே கருதினார். இங்கும் போராட வேண்டியது அவசியம் என்றார் மண்டேலா.

1963க்குள் சுதந்திரம் என சுத்த ஆபிரிக்கக் காங்கிரஸ் பிரகடனம் செய்து இருந்ததை மண் டேலா கட்டிக்காட்டி முடியாத காரியத்தை மக்களிடம் நம்புகிறார் போலச் சொன்னால் நடக்காது போனவுடன் சோர்வு தானே வரும். செய்ய முடியாததைச் சொல்லக் கூடாது என மண்டேலா சோபுக்வேயிடம் கூறினார்.

ஒருநாள் டெபு, வார்டர்களிடமும், சிறை அதிகாரிகளிடமும் சர்ச்சை பண்ணிக் கொண்டிருந் தார். "மண்டேலா தினந்தோறும் புகார் செய்வது இல்லையே! நீமட்டும் ஏன் தினமும் நச்சரிக்கிறாய்?" என ஜெயிலர் கேட்டார். "ஆ !அந்த மண்டேலாவா! அவனுக்கு வெள்ளையரைக் கண்டால் பயம். சின்னப்பயல்! நான் அப்படியல்ல" என்று கத்தினான் டெபு. "இந்த மண்டேலா யார்? திடீரென்று பத்திரிகைகளில் படம் போட்டு மண்டேலா மண்டேலா என் றால் பெரிய புரட்சிக்காரன் ஆகி விடுவானா?" என மீண் டும் கத்தினான் டெபு.

இதைக்கேட்டுச் சிரித்துக்கொண்டே இருந்தார் மண்டேலா. ஆறாண்டுத் தண்டனை பெற்று ஆலிவ ரும் சிறைக்கு வந்துசேர்ந்தார். சிறை மருத்துவமனையில் நடந்து கொண்டிருந்தபோது நானா சீதா செருப்புக்கூட இல்லாமல் தயங்கித்தயங்கி நடந்துபோய்க்கொண்டு இருப்பது தெரிந் தது. இவர் இருந்த வீட்டுப் பகுதி வெள்ளையர்க்கு என ஒதுக்கப்பட்டும், இவர் வெளியேற மறுத்ததற்காகத் தண்டனை பெற்று சிறைக்கு வந்திருந்தார். அவருடன் பேச முடியாமல் வார்டர்கள் குறுக்கே நின்றனர்.

ஒரு நாள் படிகளில் இறங்கும் போது மண்டேலா மயக்கமடைந்து விழுந்ததில் கண்பட்டையில் காயம் ஏற்பட்டது. இரத்தக் கொதிப்பு காரணம். அன்று மாலை வின்னி வந்து சந்தித்தார். மண்டேலா உடல் நலக்குறைவால் வாடுவதாகச் செய்தி பரவிவிட்டது.

## மாநாடு

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் மாநாடு 1959 க்குப் பின் 1962 லோபாட்சேயில் கூடியது. இது ஆபிரிக்காவுக்கு வெளியில் பெச்சு நாலாண்டின் எல்லையில் இருக்கிறது. இந்த மாநாட்டில் தான் தென்னாபிரிக்கக் காங்கிரஸ் தொடர்ந்து ஜனநாயக முறைகளில் இயங்கும் என்று கூறியதோடு உம்காண்டோ தென்னாபிரிக்க காங்கிரஸின் போராடுவதற்கான படைப்பகுதி என அறிவிக்கப் பட்டது. ஏனெனில் போராட்டம் என்ற பெயரில் பொறுப்பற்ற பயங்கரவாதச் செயல்களில் "போகோ போகோ" என்ற சுத்த ஆபிரிக்கக் காங்கிரஸின் துணை அமைப்பு ஈடுபட்டு வந்தது. அது தென்னாபிரிக்க அரசுக்கு எதிராக மட்டுமல்லாது அதனுடன் ஒத்துழைக்கிற ஆபிரிக்கர்களையும் தாக்கிவந் தது. எனவே ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்கு கிற அமைப்பு எனக்காட்ட இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதற்கிடையில் அரசு இனவாரி மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குவதாக அறிவித்து டிரான்ஸ்கீய் மாநிலத்தை முன் மாதிரியாகக் காட்டியது. 1963இல் டிரான்ஸ்கீய்க்குத் தேர்தல் நடத்தப்பட்டது. மக்கள் பங்கெடுத்து மிக அதிகமான பேர் எதிர்த்து வாக்களித்தார்கள்.

பாண்டுஸ்டான் திட்டத்திற்கு மண்டேலா எதிர்ப்பு தெரிவித்தாலும் அதில் பங்கெடுக்க வேண்டியது இப்போது தேவை என்றும் கருதினார். ஏனெனில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தடை செய்யப்பட்டு இருந்தது. பல தலைவர்களுக்கு நடமாட, பேசத்தடைவிதிக்கப்பட்டு இருந்தது. எனவே கிடைக்கும் இடத்தில் பேசலாமே எனக்கருதினார். இதே காலத்தில் பாண்ட்டு அதிகாரிகளுக்கு எதிராக பயங்கரவாதத் தாக்குதல் அதிகமாயிற்று. அரசு அதை அடக்க சட்டதிருத்தம் கொண்டு வந்து சந்தேகப்படும் கட்சி களை தடை செய்யவும் அவர்களதுசெய்திகளை வெளி யிடும் அச்சகங்களைப் பறிமுதல் செய்யவும் அங்கத்தினர், ஆதரவாளர்களுக்கு பல்லாண்டுத் தண் டனை வழங்கவும் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்படுத்தாமல் 90 நாட்கள் பொலிஸ் காவலில் வைத் திருக்கவும். சட்டம் வகை செய்தது. இன்னொரு திருத்தத்தின் மூலம் இந்த வழக்குகளை நீதிமன்றத் தில் முறையிட இருந்த வாய்ப்பு ரத்துச் செய் யப்பட்டது. ஒரு பாசிச சர்வாதிகார அரசு மக்களின் சகல உரிமை களையும் பறிக்க தன்னை முழு ஆயுதபாணியாக்கிக்கொண்டது.

## கண்ணற்ற தீவுக்கு

மே மாத இறுதியில் ஒரு வார்டர் வந்து மண்டேலாவை புறப்படத் தயராகும்படி சொன்னார். சிறையதிகாரியிடம் போனதுபோது அங்கு வேறு மூன்று அரசியல் கைதிகள் இருந்தனர். புறப்படுங்கள் என்றார் அதிகாரி. எங்கே என்று கேட்டார் டெபு. தீவுக்குத்தான் ... அதுதான் ரோபன் தீவுக்கு என்றார் அதிகாரி. ஜன்னலே இல்லாத ஒரு வண்டியில் நால்வரையும் சங்கிலியால் கட்டி உள்ளே தள்ளினார்கள். வண்டிக்குள் ஒரு கழிவுக்கான வாளி மட்டும் இருந்தது. இரவு பூராவும் பயணம் செய்து கேப் நகரம் போய்ச்சேர்ந்தனர். (தொடரும்)



சாவகச்சேரி மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் உட்பட பல கட்டடங்களை திறந்து வைத்த சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன யாழ். வலயப் பணிப்பாளர் றுடொல்ப் பன்கஸர் மங்கள விளக்கேற்றி வைப்பதையும், அருகில் வித்தியாலய அதிபர் கே. கதிர்காமசேகரர் நிற்பதையும் காணலாம்.




சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. இரகு நாதனையும், அருகில் சங்கத்தலைவி, பொருளாளர் அமர்ந்திருப்பதையும், செய லாளர் அறிக்கை வாசிப்பதையும் படத்தில் காணலாம். (படங்கள்-சாவகச்சேரி நிருபர்)

## 332 பேர் போராட்டத்தில் இணைவு

(மன்னார்)

இன்றைய அரசியல் நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடலையடுத்து மன்னார் மாவட்டத்தில் 320 இற்கும் அதிகமானோர் வயது வேறுபாடின்றி தம்மை தாயக விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண் டனர். இன்றைய சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடல்கள் பிரதேச ரீதியாக நடைபெற்று வருவதையடுத்து பெருமளவான மக்கள் தம்மை வயது வேறுபாடின்றி போராட்டத்தில் இணைத்துவருகின்றனர். நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தில் அடம்பன் பிரதேசத்தில் 300 பேரும், வட்டக்கண்டல், பாலைக்கண்டல் ஆகிய பகுதிகளில் 32 பேரும் என தம்மை தாயக விடுதலைப்போராட்டத்தில் இணைத்துக்கொண்டுள்ளனர். (க)

## ஐ. தே. க. எம். பிக்கள் அரசாங்கத்துக்கு தாவல்?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை, நுவரெலியா மற்றும் பொலநறுவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பக்கம் மாறவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இச் செய்தியை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மறுத்துள்ளார்.

இச்செய்தி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஊடகங்கள்தான் இத்தகைய செய்திகள் வெளியிடுகின்றன. எமக்கு இது தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைக்கவில்லை.

அமைதி முயற்சிகளை தேசியப் பிரச்சினையாகக் கருதி அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி பங்கேற்கிறது. அதற்காக ஐக் கிய தேசியக் கட்சியினரை இழுப்பதற்கான அனுமதி அல்ல அது என்றார். (க)

## கடற் கண்காணிப்பை தொடர்ந்தும்— இடை நிறுத்துவதற்கு க.கா.குழு முடிவு

(கொழும்பு)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடல்வழிக் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டிருக்கும் என அந்தக் குழு அறிவித்துள்ளது.

கண்காணிப்புக்குழுவின் கடல்வழிக் கண்காணிப்பாளர்களுக்கும் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஸனுக்கும் இடையே போர் நிறுத்தக் குழுவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வெற்றிலைக்கேணியில் இடம்பெற்ற தாக்குதல் மற்றும் கடல்வழிக் கண்காணிப்பை தொடர்வதா என்று குறித்து ஆராய்வதற்காகவே அந்தப் பேச்சவார்த்தை நடைபெற்றது.

கடல்வழிக் கண்காணிப்பை ஆரம்பிப்பதற்கு முன்னர் சில தேவைப்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவிக்கவிருப்பதாக அக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில தினங்களில் இந்தத் தேவைப்பாடுகள் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு தெரிவித்துள்ளது. (க-5)

பிறர் நலத்துக்காகப் பாடுபடுவது போல் நடிக்காதீர்கள். உண்மையிலேயே பிறர் நலத்துக்கு பாடுபடுங்கள். பிறர் நலத்துக்குச் செய்யும் தொண்டு பிறவிப்பயன் தரும்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# அமெரிக்காவின் பக்கச்சார்பு பெரும் அழிவையே தரும்

இலங்கை அரசுக்கு எந்நேரமும் உதவும் கடப்பாடு அமெரிக்காவிற்கு உண்டு. இவ்வாறு அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய கிழக்கு ஆசிய விவகாரங்களுக்கான பிரதிச்செயலாளர் டொனால்ட் காம்ப் தெரிவித்துள்ளார்.

ஒரு அரசு இன்னோர் அரசுக்கு உதவுவது ராஜதந்திர ரீதியில் பொருத்துடையதாக இருப்பினும் அந்த உதவி எவ்வாறு எந்த சூழ்நிலையில் அமைய வேண்டுமென்ற நியதியைக் கடைப்பிடிப்பது அறமாகும்.

ஆனால் யுத்த சூழ்நிலையில் இலங்கையில் சமாதானம் குலைவுற்றிருக்கும் வேளையில் அமெரிக்கா விடுத்த மேற்போந்த அறிவிப்பு அந்த நாட்டின் பக்கச்சார்புப் போக்கை வெளிப்படுத்துகிறது.

இதனை மேலும் உறுதி செய்வதாக ஐரோப்பிய நாடுகள் விடுதலைப்புலிகளை தடைசெய்யவேண்டுமென்ற அமெரிக்காவின் கோரிக்கை அமைந்துள்ளது.

இலங்கையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் வலுவிழந்து போயுள்ளது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் அநியாயமாக படுகொலை செய்யப்படுகின்றனர்.

இந் நிலையில் விடுதலைப்புலிகளை ஐரோப்பிய நாடுகள் தடைசெய்யவேண்டுமென்ற அமெரிக்காவின் கோரிக்கை எவ்வகையில் நியாயமானதென்பதில் சர்வதேச சமூகம் சீர்தூக்கி ஆராய வேண்டும்.

இலங்கையில் முதற் பணியாக சமாதான சூழலை ஏற்படுத்துவதே தேவையானதாக இருக்கும் போது விடுதலைப்புலிகளை தடைசெய்யவேண்டும். இலங்கை அரசுக்கு எந்நேரமும் உதவுவது அமெரிக்காவின் கடமை என்ற வகையிலான கருத்துக்கள் தற்போதைய கள நிலைமையை மேலும் மோசமடையச்செய்யும்.

எரிகிற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றும் வேலையை அமெரிக்க பிரதிநிதி செய்துள்ளார் என்றே ஈழத்தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இது அமெரிக்காவிற்கும் ஈழத்தமிழர்களுக்குமிடையிலான உறவுநிலையை பாதுகாப்பதாக இருக்க மாட்டாது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இலங்கையில் அதன் தலையீடு இருக்கவேண்டுமாயின் அந்த நாடு ஓர் சமநிலைப்போக்கை கடைப்பிடிக்கவேண்டும்.

ஈழத்தமிழர்கள் இந்த நாட்டில் அடிமைப்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் அடிப்படை உரிமைகளைக் கூட பெறமுடியாதவர்களாக இருக்கின்றார்கள். எனவே அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதே அமெரிக்காவின் பொறுப்பாக இருக்கவேண்டும்.

சிறிய நாட்டில் சிறுபான்மை இனம் பெரும்பான்மையினத்திற்கு எதிராக ஏன் போராட்டம் நடத்துகின்றது. அதற்கான தேவை என்ன?

இது போன்ற இன்னோரன்ன கேள்விகளை அமெரிக்கா கேட்குமாயின் நிலைமையைப் புரிந்து கொள்ளும்.

இதை விடுத்து இலங்கை அரசு தன்னிடம் ஆயுதம் கொள்வனவு செய்கிறதென்பதற்காக அந்த நாட்டிற்காக பரிந்து பேசுவது -அந்த நாடு செய்கின்ற எல்லாவேலைகளையும் ஆதரிப்பதென்பது சமாதானம் ஏற்படவேண்டுமென்ற எண்ணப்பாட்டை வெளிப்படுத்துவதாக இல்லை. இதை அமெரிக்க புரிந்து கொள்வது கட்டாயமானதாகும்.

# மாநகர சபைகளின் ஒத்துழைப்புடன் தெற்காசிய விளையாட்டு நடைபெறும்

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறும் 10ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவிற்கு பிரதேச சபை, நகரசபை மற்றும் மாநகர சபைகளினது ஒத்துழைப்பைப் பெற விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளத.

தெற்காசிய விளையாட்டு விழாவில் ஏற்பட்டை சிறந்த முறையில் துரிதமாக நடாத்தும் பொருட்டு உள்ளூராட்சி மன்றங்களினது உதவியை பெறுவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தவிர கொழும்பில் இருந்து கட்டுநாயக்க மற்றும் கொழும்பில் இருந்து மொறட்டுவ வரையிலான பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களினது உதவிகளும் பெறப்படும். தெற்காசிய விளையாட்டுவிழாவில் இம்முறை8 நாடுகளைச் சேர்ந்த சுமார் 500ற்கும் மேலான வீர வீராங்கனைகள் கலந்துகொள்கின்றனர்.

இலங்கையின் நன்மதிப்பை வெளிநாட்டவருக்கு எடுத்துக்காட்ட இதனை ஓர் அரிய சந்தர்ப்பமாக அமைச்சு கருதுகிறது.

இது தொடர்பாக இதுவரை பல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடாத்தப்பட்டிருப்பதுடன் அவர்களிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் பொதுமகன் உட்பட நால்வர் பலி

(பொலநறுவை)

பொலநறுவை வெலிகந்தை சூரியவெவ பகுதியில் நேற்று முற்பகல் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியாகினர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

வீதிச் சோதனைகளில் ஈடுபட்ட படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை திருகோணமலைப் பகுதியில் நேற்றுக் காலை வெடிப்பதற்கு ஆயத்தமான நிலையிலிருந்த கிளைமோர் குண்டொன்றை படையினர் கண்டு பிடித்துள்ளனர்.

வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்து இந்த கிளைமோர் குண்டு பொருத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருக்கோயில் பிரதேசத்தில் நேற்றுக் காலை 8.00மணியளவில் இடம்பெற்ற மற்றுமொருதாக்குதலில் அதிரடிப்படை உறுப்பினர் ஒருவர் பலியாகியுள்ளார்.

வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த படையினரை நோக்கி நடத் தப்பட்ட கிளை மோர் தாக்குதலில் இவர் பலியாகியுள்ளார்.

இதேவேளை திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் நேற்று முன்தினம் 11.00மணியளவில் இடம்பெற்ற கைக் குண்டு வீச்சு சம்பவத்தில் பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

வீட்டுக்கதவை தட்டியோர் கதவு திறக்கப்படாத நிலையில் கைக்குண்டு வீச்சை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# ஐ.நா. சிறார் அமைப்பின் அறிக்கை; த.தே.கூட்டமைப்பு கடும் அதிருப்தி

யாழ். தீவகம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் குழந்தைகள் தொடர்ச்சியாக இராணுவத்தினரால் படுகொலை செய்யப்படுவது குறித்து ஐ.நா.சிறார் அமைப்பு, யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையை ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் அண்மைய வன்முறைகளில் 6 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வன்முறைகள் தொடரும் சூழ்நிலையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை இரு தரப்பினரும் தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இரு தரப்பினரும் வன்முறைகளை நிறுத்தி ஜெனீவாப் பேச்சுக்குத் திரும்ப வேண்டும் பேச்சுக்கள்தான் அமைதியை உருவாக்கும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மே 13 ஆம் திகதி தீவகப் படுகொலை நடத்தப்பட்டு நாட்கள் ஓடிய பின்னர் தமிழர் தரப்பில் கடும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்ட பின்னர் ஒரு சம்பிரதாய அறிக்கையாக யுனிசெப் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (க)

# கைதிகளுக்கு நிவாரணம்

(கொழும்பு)

1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் இருந்து சட்டவிரோதமாக குடிபெயர முயற்சித்த வேளை கைது செய்யப்பட்டு சிறைச்சாலை தடுத்துவைக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதி பதி செயலகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமாக குடிபெயர முற்பட்ட 370 பேர் நீர்கொழும்புசிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 70 பேர்பெண்களாவர். தமிழர்கள், தசிங்களவர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் வெளிநாட்டவர்களும் இதில் அடங்குகின்றனர்.

இந்த நிலையில் ஜெராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் வேண்டுகோளுக்கு இணங்க தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பிரதம நீதியரசரிடம் கேட்டுள்ளார். (க-9)

# போர்நிறுத்த ஒப்பந்தத்தை அவுஸ்ரேலியா பாதுகாக்கும்?

(கொழும்பு)

இலங்கையில் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை தடுக்க அவுஸ்ரேலியா பங்கேற்க முடியுமென்று சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்ரேலியா சபையின் பணிப்பாளர் போல் ஒக்கலன் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இலங்கை மீள கட்டியெழுப்பும் நிலையில் போர் ஒன்று ஏற்படுமானால் அது பாரிய விளைவை ஏற்படுத்துமென்றும் அவர் எச்சரித்தார்.

அவுஸ்ரேலியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் மனித வுரிமை நலன்களை மேம்படுத்துவதற்கு இலங்கைக்கு பல்வேறு வகையில் உதவி வருகின்றது.

இதன் காரணமாக உள்நாட்டு யுத்தங்கள் மூலம் ஏற்படவிருந்த உயிரழிவுகள் தடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நோர்வே ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கையில் உரிய முறையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதற்கும் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டிற்கும் பாரிய பங்களிப்பை வழங்க வேண்டுமென்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (க-9)

# பதிவு செய்யுமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி சரசாலை பொது நூலகத்தில் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் சிறுவர்களுக்கான கதை சொல்லல் நிகழ்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதில் கலந்து கொள்ள விரும்பும் சிறார்களும் ஆர்வமுள்ள ஆசிரியர்களும் பெயர்விபரங்களை தம்மிடம் பதிவு செய்துகொள்ளுமாறும் நூலகர் இ.தர்மலிங்கம் கேட்டுள்ளார். (க-29)

# புதிய கற்கைநெறிகளை ஆரம்பிக்க அனுமதி

(கொழும்பு)

கிழக்கு இலங்கை பல்கலைக் கழகத்தில் இரண்டு புதிய கற்கை நெறிகளை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

ஒப்பிட்டு சமயத்துறை மற்றும் கல்வித்துறை ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு இலங்கை பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (க)

# ஆய்வு கூடங்களை அமைக்க நடவடிக்கை

பின்தங்கிய பிரதேச பாடசாலைகளின் விஞ்ஞான கல்வியை முன்னேற்றும் முகமாக விஞ்ஞான ஆய்வு கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.


வடமேல் மாகாண கல்வியமைச்சு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஜப்பானிய அரசின்நிதியுதவியுடன் இவ் விஞ்ஞான கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. (க-9)



# சாயி அருளமுதம்

தனது உண்மை நிலையான தெய்வீகத்தின் ஒளிக்கீற்றை வெளிப்படுத்துவதற்காகவே ஜீவி இந்தப் பிறவியெடுத்துள்ளது. உடலானது கடவுள் எனப்படும் நெய்ககாக ஏங்கும விளக்கின் திரியாகும். பண்ட சாலையிலுள்ள மற் றெல்லா உணவுப் பொருடகளையும்விலக்கிவிட்டு பொறிக்குள இருக்கும் எளியவாசம் மிகுந்த இரையினால் கவரப்பட்டு தனது மௌடீகத்தினால் பொறியில் அகப்பட்டுக்கொள்ளும் எலியைப் போல் மனிதனும் தனது உண்மையான ஆதாரத்தை அலட்சியப் படுத்தி அழிகின்ற செல்வத்தை நாடி உழன்று வாழ்க்கையை வீணாக்குகிறான்.

நாளாந்த நற்சிந்தனை



நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற சமயத் தலைவர்களின் மௌனப்போராட்டத்தின் இறுதியில் ஐ.நா.செயலாளருக்கான மகஜர் கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# அரசாங்கத்தில் உள்ள ஜே.வி.பியை உடனடியாக வெளியேற்ற வேண்டும்

## ரவூப் ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பியை வெளியேற்ற வேண்டுமென்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் அமைதி ஏற்படுத்த முஸ்லிம் காங்கிரஸ் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்யத் தயாராகி இருக்கிறது.

அனைத்துக் கட்சியையும் இணைத்து தேசிய அரசாங்கம் அமைக்கும் மகிந்தவின் முயற்சிக்கு ஜே.வி.பி.தடையாகவுள்ளது.

ஜே.வி.பியை மகிந்த ராஜபக்ஷ தனது கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து வெளியேற்ற வேண்டும்.

அரசாங்கம் அமைதியை உருவாக்குவதாக கூறுகிறது. ஆனால் போர் ஏற்கனவே தொடங்கி விட்டது. எதிர்க்கட்சியும் ஆளும் கட் சீயும் இணைந்து செயற்பட எம்மை அழைக்கின்றனர். ஆனால் நாம் அவர்களுடன் இணைய மாட்டோம்.

அக்கரைப்பற்றில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளபோதும் நாம் பொறுமை காக்கின்றோம். பதிலடி கொடுக்கவில்லை என்றார் ஹக்கீம். (ச-05)

## அல்லைப்பிட்டியில்

# இடம்பெயர்ந்துள்ள மக்களை யாழ்.ஆயர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ள மக்களை யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சென்று பார்வையிட்டார்.

நேற்று மதியம் அங்கு சென்ற ஆயர் தலைமையிலான குழுவினர் இடம்பெயர்ந்த மக்களுடன் கலந்துரையாடினர்.

அல்லைப்பிட்டியில் தமக்குப் பாதுகாப்பு இல்லை எனவும் அவ்விடத்தில் இருந்து வேறு இடத்திற்குச் செல்லக்கூடிய வசதிகளை ஏற்படுத்தித்தருமாறும் அவர்கள் ஆயரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தீவகத்தில் கடந்த சனிக்கிழமை ஆயுததாரிகளால் 13 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டமையை அடுத்து அங்கு பெரும் பதற்றமும் அச்சமான சூழலும் தோன்றியுள்ளது.

இந் நிலையில் அங்கிருந்த மக்கள் இடம் பெயர முயற்சித்தபோதும் கடற்படையினர் அவர்களை வேறு இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கவில்லை எனவும் கூறப்பட்டது. (ச-5)

# ஐ.நா.மனித உரிமைக்குழுவில் முறைப்பாடு செய்ய புலிகள் முடிவு

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கும் படுகொலைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்திடம் முறைப்பாடு செய்ய தமிழீழ விடுதலைப்புலிகள் முடிவு செய்திருப்பதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்ட பிஞ்சுக்குழந்தைகள், பொதுமக்கள் ஆகியோரது விபரங்களும், புகைப்படங்களும் அந்த முறைப்பாட்டில் இணைக்கப்படவுள்ளன.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டம் ஜூனில் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. அக் கூட்டத்தின்போது தமிழ் அமைப்புக்களின் பெயரால் இம் முறைப்பாடு கையளிக்கப்படவுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையக் குழுவில் இலங்கையும் அண்மையில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கு கிழக்கில் இடம் பெறும் மனிதப் படுகொலையை சர்வதேச மன்னிப்புச்சபை கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இயல்புநிலை...

மேலும் கொலைகளை அதிகரிப்பதற்கான திட்டமாகவே நாம் கருதுகின்றோம்.

எனவே இப் பணிப்புறக்கணிப்பானது எமது குடாநாட்டு மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரையும் குடா நாட்டு நிலைமைகள் சாதாரண நிலைக்கு திரும்பும் வரை யும் தொடரும் என்பதை எமது மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம் என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரச துறையில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இன்று முதல் தமது கடமைக்குச் செல்ல வேண்டுமென பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ச-05)

## வன்னி...

படுகொலை செய்து குவிக்கும் போக்குக்கு எமது பெரும் வெறுப்பையும் அருவெறுப்பையும் மிகவும் ஆழ்ந்த அக்க றையையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இரக்கமற்ற கொடூரக்கொலைகளும் பெண்கள் ,சிறுவர்கள் உட்பட பொதுமக்க ளின் மயான மறைவுகளும் பொதுமக்க ளின் இருப்பிடங்களை குறிவைத்து நடத்தும் கண்மூடித்தனமாக குண்டு வீச்சுக்களும் இவையெல்லாம் எமது பண்புள்ள சமூக உறுப்பினரை திட்டமிட்டு அவமதிப்பதா கவும் அத்துடன் சட்ட ஒழுங்கு ஆட்சியாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள் ளன என்பதையும் வெளிக்காட்டுகிறது.

உண்மைக்கும் நிகழும் சம்பவங்களுக்கும் சாட்சியம் பகிரவேண்டிய தார்மீக கடமை கொண்ட வெளிநாட்டு, உள்நாட்டு பிரதிநிதிகளும் நிறுவனங்களும் தற்சமயம் தற் பாதுகாப்பான மௌனத்தை மிகவும் கவனமாக பேணுவதன் காரணமாக, அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களை மதித்து காப்பாற்றுவதை உறுதி செய்யவும் அத்துடன் இக் கொலை வெறியாட்டத்தை தடுத்து நிறுத்தி எங்கள் மக்களுக்கு விடுதலையையும் ஆறுதலையும் பெற்றுத்தரவும் அர்த்தமுள்ளதும் பயனளிக்கக்கூடியதுமான வழிமுறைகளை மேற் கொள்ளுமாறு எங்கள் பெருமதிப்பிற்குரிய ஐ.நா.வின் செயலாளர் நாயகமாகிய தங்களையும் மனித உயிர்களின் மகத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் ஐ.நா. நிறுவனத்தின் உறுப்பு நாடுகளையும் மிகவும் விநயமாக வேண்டுகின்றோம். (ச-05)

## யாழ்.நகர...

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற் கொண்டதுடன் பிரேதபரிசோதனையின் பொருட்டு சடலத்தை யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் யாழ்.நகரப் பகுதி சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. (ச-15,132,133)

## யாழ்.சிறைச்...

திருமதி சிறிநிதி நந்தசேகரன், மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன், பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் ஆகியோர் போராட்டத்தை மேற்கொண்ட கைதிகளுடன் பேச்சுவார்த் தையில் ஈடுபட்டதுடன் அவர்களின் பிரச்சி னைகள் குறித்து தீர்வுகாண்பதாகவும் உறு தியளித்தனர். இதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. யாழ்.மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகளும் நேற்று சிறைச் சாலைக் குச்சென்று கைதிகளுடன் உரையாடியுள்ளனர்.

யாழ்.சிறைச்சாலையில் 131 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது இவ்வாறு இருக்க நேற்று காலை முதல் யாழ்.சிறைச்சாலையைச் சூழவுள்ள வீதிகளூடான போக்குவரத்திற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததுடன் பெருமளவு இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். (ச-15,132,133)

## வவுனியாவில்...

இத் தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தமது தரப்பில் ஒருவர் காயமடைந்ததாக தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதலின் போது ஒரு எல்.எம்.ஜி ரக சுடுகலன் மற்றும் ரி-56ரக துப்பாக்கிகள் , தொலைத் தொடர்பு சாதனம் உட்பட ஆயுத தளபாடங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தனர்.

இதேவேளை நாகர் கோவில் முன்னரங்க பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நேற்று மாலை நேரடி துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எழுதுமட்டுவாளுக்கு அருகே நாகர் கோவிலுக்கும் முகமாலைக்கும் இடையே உள்ள கண்டல் காட்டுப் பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற இச் சம்பவத்தில் இரு படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த படையினர் இருவரும் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச-05)

## திருக்கோவிலில்...

பொதுமருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலையடுத்து சிறப்பு அதிரடிப் படையினர் அப்பகுதியில் பாரிய சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். (ச-05)

## தமிழினப்...

நிலையத்திற்கு கொண்டு சென்றனர். இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களான ஓட்டமாவடி ,வாழைச்சேனை முஸ்லிம் பிரிவு, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய இடங்களில் வர்த்தக நடவடிக்கைகள் வழமைபோன்று காணப்பட்டன. (ச-05)





04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 18.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.